# புதிய இதயம்!

(ஞாயிறு சிந்தனைகளும் புனிதர்களும்)

2015 ஆடி

வெளியீடு :
மறைக்கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்.

அச்சேற்றலாம் :

**அருட்பணி யஸ்ரின் B. ஞானப்பிரகாசம்**
குருமுதல்வர்,
ஆயர் இல்லம்,
யாழ்ப்பாணம்.

# புதிய இதயம்!

## 05.07.2015 ஆண்டின் பொதுக்காலம் 14ம் ஞாயிறு

**எசே. 2:2–5 திருப்பாடல் 125:1–4 2கொரி. 12:7–10 மாற்கு 6:1–6**

மனித வாழ்வின் விசித்திரமான எண்ணக்குவியல்கள், நடைமுறை வழித்தடங்கள், செயற்றிட்டங்கள், முரண்பாடான தீர்மானங்கள் ஆச்சரியத்தை வருவிக்கின்றன. ஒன்றை அல்லது ஒரு செயலை, ஒரு கருத்தை அல்லது ஒரு நபரை ஏற்றல் அன்றேல் ஒதுக்கிவைத்தல் போன்ற வற்றின் அடிப்படை ஆதாரம் கேள்விக்குறியாகவே இருக்கின்றது. அது இன்றைய காலகட்ட சவால்களில் எம்மைத் திக்கு முக்காடவைக்கின்றது. இறை இருப்பு எனும் கருப்பொருள் பெரும்பாலும் ஒதுக்கிவைக்கப்பட்டதாக, அச்சிந்தனை பல வேளைகளில் பெரும் சவாலாக முன்வைக்கப்படுகின்றது. இது தேவையே இல்லை என்கின்ற வாதமும் மேலோங்கி வருவது கண்கூடு.

இன்றைய ஞாயிறு விவிலியப் பகுதிகள் மேற்கூறப்பட்ட சிந்தனைகளுக்கு சவால்மிகு வழித்தடங்களாகக் காணப்படுகின்றன. இறைவாக்கினர் எசேக்கியேலின் இறைவாக்குப்பணி இலகுவானதொன்றாக அமைந்திருக்கவில்லை. காயப்பட்ட, நோவுபட்ட மக்களுக்குத் தீர்க்கமான வழியைக் காட்டுவதாகக் காணப்படுகின்றது. எசேக்கியேல் எனும் பெயரின் விளக்கம் "ஆண்டவர் ஆற்றல் அளிப்பார்" என்பதாகும் மக்களின் அச்சம் தவிர்த்து தெளிவான பாதையில் தடம்பதிக்க உந்தித்தள்ளுகின்றது. இவரதுபணி ஆழமான அடையாளங்களுடாகத் தெளிவான முறையில் இறையிருப்பை உணர்த்துவதாகும். பவுல் அடியாரின் வாழ்வனுபவமும் இறைதேடலும் எசேக்கியேலின் கூற்றையே தழுவியுள்ளது. விளங்கிக் கொள்ள முடியாநிலையில் மீண்டும் மீண்டும் இறைவனிடம் யாசித்த நிலையில் "என் அருள் உனக்குப் போதும்" எனும் இறை குரல் இவரது வாழ்வின் பெரும் ஆற்றலாக அமைவது இவரது இறைஅனுபவம்.

நற்செய்தி படிப்பிப்பது என்ன? வாடி வதங்கி, வாழ்வின் வழிதேடி, பிரச்சினைகளிலேயே சிக்குப்பட்டு ஏக்கத்தில் இறைப்பிரசன்ன உணர்வைத் தொலைத்து அல்லது தவிர்த்து வாழ வழி காணும் உலகிற்கு அளிக்கும் படிப்பினை யாது?

## 12.07.2015 ஆண்டின் பொதுக்காலம் 15ம் ஞாயிறு

**ஆமோஸ் 7:12–15 திருப்பாடல் 85:9–14 எபேசியர் 1:3–14 மாற்கு 6:7–13**

ஆண்டவரே! உமது பேரன்பை எங்களுக்குக் காட்டியருளும். உமது மீட்பையும் எங்களுக்குத் தந்தருளும். இஸ்ராயேல் மக்கள் மத்தியில் இறைவாக்கு உரைத்தவர்கள் எல்லா வேளைகளிலும் ஏற்றுக்கொள்ளப்பட வில்லை. இதற்கு ஆமோசும் விதிவிலக்கல்ல. இறை வாக்காகிய ஆண்டவரின் திருச்சொல் நிபந்தனையற்ற உளமாற்றத்தை, இறையருள்பால் வாழ்வைத் திருப்புவதை வேண்டிநிற்கிறது. மக்கள் இறைவாக்கினரைப் புறம் தள்ளும் வேளையிலும் இவைாக்கினரின் பணி தடங்கலினின்றிச் செயற்பட்டே ஆகவேண்டும். அதை தட்டிக் கழிக்கவியலாது.

எபேசியரின் திருமுகத்தின் இன்றைய வாசகப்பகுதி கிறிஸ்தவ இயல் பாடலாகும். அதன் ஒவ்வொரு நிலையிலும் கிறிஸ்துவே மையப்படுத்தப்பட்டுள்ளார். ஒரு வட்டத்தின் நடுப்புள்ளி போன்று கிறிஸ்து அமைந்துள்ளார். மையப்புள்ளியின்றி ஆரையோ விட்டமோ சுற்றளவோ இல்லை. இறைமக்களின் தெரிவு கிறிஸ்து என்னும் மையப்புள்ளியையே சார்ந்தது. வேறெதுவும் கிறிஸ்துவிற்கு ஈடாக இடம்பெற இயலாது. எமது வாழ்வில் நாம் பெற்றது, பெறுவது, பெறப்போவது யாவுமே கிறிஸ்து என்னும் மையப்புள்ளியில் உரசப்படல்வேண்டும். பரிசுத்த ஆவி நாம் கிறஸ்துவைப் பெற்றதிற்கான சாட்சிய, பெறுமதி அளிக்கின்ற முத்திரையாக அமைகின்றார். அவரூடாக கிறிஸ்துவில் அனைத்தும் தந்யையின் மாட்சிமைக்கே. இவ்வினிய பாடலின் உள்ளடக்கத்தை அறிவிக்க இயேசு பணியாளரை அனுப்புகின்றார்.

நற்செய்தியில் காணப்படும் இன்றைய வாசகப்பகுதி தெளிவான முறையில் நற்செய்திப் பணியின் பின்னணியைக் காட்டுகின்றது.

அது எங்கிருந்து வருகின்றது?

அதன் உள்ளடக்கம் என்ன?

அதன் அறிவிப்பில் காணப்படும் பலம் எங்குள்ளது?
அதன் விளைவுகள் எவை?
இயேசுவை மையமாக்கப்பட்ட பணியே நற்செய்திப் பணியாகும். பணத்தால், ஆள்பலத்தால், ஆடம்பரக் கொண்டாட்டங்களால் நற்செய்திப் பணியை இனம் காண முடியுமா?
ஆலய விழாக்கள், வீட்டுக் கொண்டாட்டங்கள், சமூக மேம்பாட்டு நிகழ்வுகள் இவை அனைத்தும் இறைவாக்கை உணர்த்துபவையாக, கிறிஸ்தவப் பகிர்தலை மையப்படுத்துப வையாக, காயப்பட்ட வாழ்வினைக் குணப்படுத்து பவையாக அமைதல்வேண்டும்.

– G. எட்மன்ட் மைக்கல் அ.ம.தி.

## 19.07.2015 ஆண்டின் பொதுக்காலம் 16ம் ஞாயிறு

**எரே. 23:1-6 தி.பா. 23:1-6 எபே. 2:13-18 மாற்கு 6:30-34**

"ஆண்டவரே எனது ஆயன். எனக்குக் குறை ஏது?" தளராத விசுவாச சிந்தையோடு நாம் அவரை வாயாரப் பாடிப் புகழ்கின்றோம். அவரின் மேய்ச்சலின் மந்தைகள் நாம் என அவர் கரத்தில் எம்மை ஒப்படைத்துக் களிகூருகின்றோம். இவ்வாறு எம்மைப் பூரண இறைபராமரிப்பில் நைவேத்தியம் பண்ணுவது எமது தளராத விசுவாசத்தின் வெளிப்பாடாகும்.

இவ்வாறு "ஆண்டவரே எனது ஆயன். நான் அவர் மேய்ச்சலின் ஆடு" என்ற சிந்தனை ஓட்டம் இருந்தாலும் இன்றைய முதலாம் வாசகமானது இறைவன் தன் மந்தையின் மேல் கொண்டுள்ள தாகம் துல்லியமாக வெளிக் காட்டப்படுகின்றது. அறநெறி நின்று நல்வழி காட்டாத மேய்ப்பர்களை அவர் மென்மையாகச் சாடுகின்றார். மந்தையைச் சிதறடிக்கும் மேய்ப்பர்களை நீக்கிவிட்டு பேணிக் காக்கும் தன்னலமற்ற தியாக சிந்தைநிறை மேய்ப்பர் களை நியமிப்பார் என்று கூறுவது அலைந்து திரியும் ஆடுகளிற்குக் கிடைக்கும் அருள் ஊற்றாகும். அவ்வழி வரும் நல்மேய்ப்பனே இயேசு என்பதை இறைவாக்கினர் எரேமியா துல்லியமாகச் சுட்டுகின்றார்.

இன்றைய இரண்டாம் வாசகத்தில் வேற்றுமைகளில் ஒற்றுமை காணும் நல்தலைவனாக இயேசு சித்தரிக்கப்படுகின்றார். விருத்தசேதனம் செய்யப்படாத புற இனத்தவரோடு யூத இனம் ஒருங்கிணைக்கப்பட்டு

புதியதொரு மனித இனம் மலரும் நிலமாக கிறிஸ்து எனும் தலைவர் மாறுகின்றார். அந்தப் புதிய இனம் மலரத் தன்னை விதையாக்கினார். இதுவே தியாகம் நிறைந்த தலைவரின் தன்னிறைந்த செயற்பாடாகும்.

இன்றைய நற்செய்தியானது கிறிஸ்துவின் ஆன்மீக தாகம் ஏழைகள் மேலே, அவரின் பரிவு ஆயனற்ற ஆடுகள் மேல் என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. அந்த தாகம், வாஞ்சை அவரை இயக்கும் உந்து சக்தியாக மாற மிகப் பெரிதும் அற்புதத்தைச் செய்கின்றார் இயேசு. பரிவும் இரக்கமும் கொண்ட தலைவனாய் தன்னிகரற்ற செயல்களைச் செய்துமுடிக்கின்றார். திருச்சபையைச் சிதறித்துச் சின்னாபின்னமாக்கும் கொள்கைகளை முறியடிப்போம்.

உலக மக்கள் உலக ஈர்ப்புக்களால் கவரப்பட்டுத் தம்மை இழந்துவிடாமல் நல்லாயன் இயேசு பரிவன்போடு பாதுகாத்துவருகின்றார். அவரது தொடர் பாதுகாவல் அனைத்து தீயசக்திகளையும் வெல்லுவதாய் அமைகின்றது. அவரது ஆக்கபூர்வமான அனைத்துச் செயற்பாடுகளும் தீய மாயவலைப் பின்னலை முற்றுமுழுதாக முறியடித்து, இறை இராட்சியப் பிரசன்னத்தை, அதன் வலுவான வெளிப்பாட்டை உறுதிப்படுத்துகின்றது.

– J. ஜீவரெட்னம், அ.ம.தி.

## 26.07.2015 ஆண்டின் பொதுக்காலம் 17ம் ஞாயிறு

**2அரசர்4:42–44, எபேசியர் 4:1–6, தி.பா. 145:10–18, யோவான் 6:1–15**

எமது நாளாந்த வாழ்க்கையில் அனுபவிக்கும் ஆழமான தாகத்தையும் பசியையும் யார் போக்க முடியும்? அன்று பல்லாயிரக்கணக் கான மக்கள் இயேவின் வார்த்தையை, வாழ்வின் வார்த்தையைக் கேட்பதற் காகத் தாகத்தோடிருந்தார்கள். இயேசுவின் சீடர்கள் பசியோடு இருந்தவர் களை, தத்தம் வீடுகளுக்குப் பசியோடு அனுப்பவே விரும்பினார்கள். காரணம் தங்களிடம் வளங்களும் வாய்ப்புக்களும் இல்லை என்பதை உணர்ந்தார்கள். ஆனால் வாழ்வின் அப்பமாகிய இயேசுவோ ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து, இறைவேண்டல் செய்து, பசியாறும்வரை அவர்களுக்குப் பகிர்ந்தளித்தார். இஸ்ராயேல் மக்கள் இறைவாக்கினர் ஒருவரை எதிர்பார்த்தார்கள். "உன் கடவுளாகிய ஆண்டவர்

உன் சகோதரர் நடுவினின்று என்னைப்போல் ஓர் இறைவாக்கினரை ஏற்படுத்துவார். நீ அவருக்குச் செவிகொடு" (இணைச்சட்டம் 18:15).

இயேசு செய்த அரும் அடையாளங்கள், குறிப்பாக ஐந்து அப்பங்களை ஐயாயிரம் ஆண்களுக்குப் பகிர்ந்தமை எதிர்பார்க்கப்பட்ட, அர்ச்சிக்கப்பட்ட இறைவாக்கினர், அரசர் இயேசுவே என்பதை எண்பிக்கின்றன. ஐயாயிரம் ஆண்களுக்கு அப்பம் பகிர்ந்த இப்புதுமை நான்கு நற்செய்தி ஏடுகளிலும் பதிவுசெய்யப்படுவது இதன் சிறப்பாகும். இப்புதுமையின் உட்பொருள் என்ன? புதிய ஏற்பாட்டில், இயேசு பசியாயிருந்த மக்களுக்கு அப்பங்களைப் பகிர்ந்தளித்து, அழியா வாழ்வு தரும் அப்பமாகத் தன்னையே கல்வாரிச் சிலுவைப் பலியில் தியாகத் திருவிருந்தாய் கொடுக்கவிருப்பதை முன்கூட்டியே அறியப்படுத்துகின்றார். ஐயாயிரம் பேரைப் போசித்தமை கடவுளின் பேரிக்கத்தையும் எங்கள் சார்பாக அவரது பேரன்பையும் வெளிக்காட்டி நிற்கின்றது. கடவுள் கொடுக்க ஆரம்பிக்கும் பொழுது, தாராளமாகக் கொடுக்கமுன்வருகின்றார். நாம் தாராளமாகப் பிறரோடு பகிர்ந்துகொள்ளவேண்டும் என்பதற்காக எமக்கு அவர் மேலதிகமாகத் தருகின்றார். கடவுள் இவ்வாறு எமக்கு இலவசமாக அள்ளி அள்ளித் தருகின்றார். நாமும் அவரது மனப்பான்மையில் வளர முன் வருகின்றோமா? பேரன்புமிக்க அன்புநெஞ்சங்களாய் வாழ ஆசைப்படுகின்றோமா? "நான் உங்களுக்கு நயமான கோதுமையை உணவாகக் கொடுப்பேன். உங்களுக்கு மலைத் தேனால் நிறைவளிப்பேன்" (திருப்பாடல் 81:16).

மக்கள் உண்டபின் ஐந்து வாற்கோதுமை அப்பங்களிலிருந்து எஞ்சிய துண்டுகளைச் சேர்த்துச் சீடர்கள் பன்னிரெண்டு கூடைகளில் நிரப்பினார்கள். இயேசு செய்த இந்த அரும் அடையாளத்தைக் கண்ட மக்கள், "உலகிற்கு வரவிருந்த இறைவாக்கினர் உண்மையில் இவரே" என்றார்கள் (யோவான் 6:13-14). கொடுக்கக் கொடுக்கக் கூடுவது இறையன்பாகும். இவ்வாறு நாமும் இயேசுவின் மனப்பான்மையில் நாளாந்தம் வளர முற்படும்பொழுது நாமும் எம்மிடம் புதைந்துள்ள நற்பண்புகளைப் பெருகச் செய்து பகிர்ந்துவாழும் தாய்த் திருச்சபையின் பங்காளிகளாவோம்.

"நீங்கள் பெற்றுக்கொண்ட அழைப்பிற்கு ஏற்ப வாழுங்கள். முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்கி, அமைதியுடன் இணைந்து வாழ்ந்து, தூயஆவி அருளும் ஒருமைப்பாட்டைக் காத்துக்கொள்ள முழுமுயற்சி செய்யுங்கள்" (எபேசியர் 4:2-3) என்று புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் இறைவாஞ்சையோடு கூறுவது எமது நல்வாழ்விற்கு வித்தாக அமைகின்றது. அன்பின் விழுதுகளை ஆழமாக மனங்களில் பதித்து அன்புச் சமுதாயத்தைக் கட்டி எழுப்புவோம்.

**ஆடி 1 புனித றுமோல்ட் ( - 775)**

புனித றுமோல்ட் இளம் வயதிலேயே உலகினைத் துறந்து, ஏழ்மை வாக்குறுதியை முழு மன விருப்போடு எடுத்துக்கொண்டார். தரித்திரம், தூய்மை, ஆசாபாசங்களிலிருந்து விடுதலை போன்ற நற்பண்புகளைத் தனதாக்கிக் கொண்டார். சாந்தம், தாழ்மை, உபவாசம் போன்ற நற்கிருத்தியங்களால் நிரப்பப்பட்டு கிறிஸ்தவ முதிர்ச்சியில் நாள்தோறும் வளர்ச்சியடைந்து பயணித்தார். இவர் தனது சொந்த நாட்டில் பல ஆண்டுகள் பணி ஆற்றியபின்னர் யேர்மனிக்குச் சென்று சிலை வழிபாட்டை மேற்கொள்வோருக்கு விசுவாசத்தைப் போதித்து சிறப்புப் பணியாற்றினார். உரோமைக்குச் சென்று அப்போஸ்தலிக்க ஆசீர்வாதம் பெற்றபின்னர், பிறகான்றிற்குச் சென்று வேதம் போதித்து நாட்டை மனம் மாற்றினார். இவர் ஆயராக அபிசேகம் செய்யப்பட்டு, தூய ஏகாந்தத்தில் கடவுளோடு தனது ஆவியைப் புதுப்பித்து, தனது வெளிவாரியான செயற்பாடுகளை மெருகூட்டினார்.

775ம் ஆண்டு, ஆனி மாதம் 24ம் திகதி, இவர் பீலியாலின் இரு புதல்வர்களால், ஒருவரது விபச்சாரக் குற்றத்தினைச் சுட்டிக் காட்டியதால் வெட்டிக் கொல்லப்பட்டார். இவரது பூதவுடல் ஆற்றில் எறியப்பட்டபோதிலும் அது அற்புதமாக இவரது நண்பன் அடோ பிரபினால் எடுக்கப்பட்டு, மெக்லீனில் புதைக்கப்பட்டு, அங்கு அவரது பெயரில் கோவில் கட்டப்பட்டது மெக்லீன் நகர் இவரைத் தனது பாதுகாவலனாகவும் அப்போஸ்தலனாகவும் பெருவிழா எடுத்து, லீவு நாளாக அனுஸ்டித்துக் கொண்டாடுகின்றது. 1741ம் ஆண்டிலிருந்து இவரது திருவிழா அயர்லாந்து நாடு முழுவதும்

கொண்டாடிடும் நிலமை தோன்றியது குறிப்பிடத்தக்கது.

**ஆடி 3 புனித தோமா**

திதிம் எனப்படும் தோமா கலிலேயாவில் பிறந்தார். இவர் மீன்பிடிக்கும் தொழிலைச் செய்துவந்தார். பன்னிருவருள் ஒருவரான திதிம் எனும் தோமா இயேசு வந்தபொழுது அவர்களோடில்லை. மற்றச் சீடர்கள் அவரிடம், "ஆண்டவரைக் கண்டோம்" என்றார்கள். தோமா அவர்களிடம், "அவருடைய கைகளில் ஆணிகளால் ஏற்பட்ட தழும்பைப் பார்த்து அதில் என் விரலை விட்டு, அவர் விலாவில் என் கையை விட்டாலன்றி நான் நம்ப மாட்டேன்" என்றார். எட்டு நாட்களுக்குப் பின் அவருடைய சீடர்கள் உள்ளே கூடியிருந்தார்கள். அன்று தோமாவும் அவர்களோடிருந்தார். கதவுகள் பூட்டப்பட்டிருந்தது. இயேசு உள்ளே வந்து அவர்கள் நடுவே நின்று, "உங்களுக்கு அமைதி உரித்தாகுக" என்று வாழ்த்தினார். பின்னர் அவர் தோமாவிடம்,"இதோ என் கைகள்! இங்கே உன் விரலை இடு. ஐயம் தவிர்த்து நம்பிக்கை கொள்" என்றார். தோமா அவரைப் பார்த்து, "நீரே என் ஆண்டவர்! நீரே என் கடவுள்!" என்றார் (யோவான் 20:24-28).

பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவரான தோமா பிலிப்புவினால் இயேசுவிற்கு அறிமுகப்படுத்தப்பட்டார். இயேசுவினால் இவர் அழைக்கப்பட்டபொழுது இவருக்கு வயது இருபத்து ஒன்பது. திருமணமாகி இவருக்கு நான்கு பிள்ளைகள் இருந்தார்கள். ஆரம்பத்தில் இவர் தச்சனாகவும் மேசனாகவும் தொழிலாற்றினார். பின்னர் தரிசேயாவில் குடியேறியபொழுது மீன்பிடித்தொழிலை மேற்கொண்டார். இவர் தனது சிறிய கிராமத்தில் பெயர் பெற்று விளங்கினார். நுண்ணறிவு கூடியவராய் அப்போஸ்தலர்குழுவின் விஞ்ஞானியாய் தோமா திகழ்ந் தார். இவரது பெற்றோர் தமது திருமணவாழ்வில் மகிழ்வின்றிக் காணப்பட்டார்கள். இது இவரது வாழ்விலும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இவர் முரட்டுத்தனத்தில் வளர்ந்தார். இவர் அப்போஸ்தலர் குழுவோடு இணைந்தையிட்டு தனக்குத் தொல்லை குறைந்துவிட்டது என்று எண்ணி, இவரது மனைவி மிகவும் சந்தோசப்பட்டார். பேதுருவும் ஏனைய அப்போஸ்தலர்களும் ஆரம்பத்தில் இவரது முரண்பட்ட நடத்தையையிட்டு கலவரமடைந்தார்கள். ஆனால் பின்னர் இவரது நேர்மையை முன்னிட்டு இவரைக் கூடுதலாக

அன்புசெய்தார்கள். இயேசுவோடு இவர் கூடுதலாகச் சேர ஆரம்பித்ததும் இவரது ஆளுமையில் பாரிய மாற்றம் ஏற்பட்டது. மிகுந்த அன்பும் நீதியுமுடைய தனது எசமான் இயேசுவை தோமா மிக்வும் பாராட்டினார். இயேசுவின் ஆளுமையினாலும் கொள்கைகளாலும் தோமர் கூடுதலாகக் கவரப்பட்டார். இயற்கையை நேசித்தார். இயேசுவினதும் அப்போஸ்தலர் குழுவினதும் தீர்மானங்களை உடனுக்குடன் நிறைவேற்றுவதில் துணிச்சலுடன் ஆர்வம் காட்டினார்.

இந்தியாவிற்கு நற்செய்திப் பணியாற்ற தோமா அழைக்கப்பட்டார். புதிய சவால்களை எதிர்கொள்ளத் தடுமாறியவராய், இவர் ஆரம்பத்தில் பின்வாங்கினார். எனினும், இறைஏவுதலால் கி.பி. 52ல் நற்செய்திப் பணியாற்ற இந்தியாவிற்கு வருகை தந்தார். மயிலாப்பூரில் திரளான மக்களுக்குப் புனித தோமையாரர் போதித்தார். இவரது போதனையால் பலர் கத்தோலிக்க மறையைத் தழுவியதைக் கண்டு ஆத்திரமடைந்த ஒரு பூசாரியாரர், தோமா தியானத்தில் மூழ்கியிருந்தபொழுது, 72 ஆடி மாதம் 3ம் திகதி அவரை ஈட்டியால் குத்திக் கொன்றார். மயிலாப்பூரிலுள்ள இவரது கல்லறையை பல நூற்றாண்டுகளாக ஆயிரக்கணக்கான பக்தர்கள் அடிக்கடி தரிசித்துவருகின்றார்கள்.

**ஆடி 14 புனித கமிலஸ் டீ லெல்லிஸ் (1550-1614)**

நேபிள்ஸ் நாட்டிலுள்ள பச்சியானிக்கோவி 1550ல் பிறந்தார். குழந்தைப் பருவத்திலேயே தனது தாயை இழந்தார். ஆறு வருடங்களின் பின்னர் தனது பண்பாளனான தந்தையையும் பறிகொடுத்தார். எழுதவும் வாசிக்கவும் மட்டுமே தெரிந்த இவர் இளம்வயதிலேயே இராணுவத்தில் இணைந்து 1574வரை தொழில்புரிந்தார். பின்னர் சூதாட்டத்திற்கு அடிமையாகி அனைத்தையம் இழந்தநிலையில் அந்தரித்துக் காணப்பட்டான். கப்புச்சியன் துறவியரின் இரு கழுதைகளை ஓட்டிப் பிழைத்துக்கொண்டான். துறவியரின் தூண்டுதலால் மனமாற்றம் பெற்று தனது மார்பினில் அறைந்துகொண்டு, அழுதழுது, தனது பாவங்களுக்குத் தக்கபடி பரிகாரத்தை மேற்கொண்டார். ஒரு காலில் மாறாப் புண் ஒன்று இருந்ததால் நித்திய வாக்குறுதிக்கு இவர் அனுமதிக்கப்படவில்லை. எனவே, தனது சொந்த நாட்டைவிட்டு உரோமைக்குச் சென்று ஆஸ்பத்திரியில் பணியாற்றினார்.

பக்தி முயற்சிகளில் ஆர்வத்தோடு ஈடுபட்டு இரவும் பகலும் நோயாளிகளுக்குப் பணிபுரிந்தார்.

**ஆடி 22 புனித மகதலா மரியா**

யூதப் பெண்மணியாகிய மரியா மகதலா எனும் ஊரில் பிறந்ததால் மகதலா மரியா என அழைக்கப்படுகின்றார். மகலதா என்ற சொல் எபிரேயத்தில் மிக்டால் எனப்படும். இதன் அர்த்தம் கோபுரம் என்பதாகும். ஏழு பேய்கள் நீங்கப்பெற்றவளாக மகதலா மரியாவை புனித லூக்கா வர்ணிக்கின்றார். இயேசுவின் சிலுவையடியில் நின்ற ஒருவராக இவர் காணப்படுகின்றார்.

"இயேசு ஊர் ஊராகச் சென்று இறையாட்சி பற்றிய நற்செய்தியை அறிவித்து வந்தார். பன்னிருவரும் அவரோடிருந்தனர். பொல்லாத ஆவிகளினின்றும் நோய்களினின்றும் குணமான பெண்கள் சிலரும் ஏழு பேய்கள் நீங்கப்பெற்ற மகதலா மரியாவும் ஏரோதுவின் மாளிகை மேற்பார்வையாளர் கூசாவின் மனைவி யோவன்னாவும் சூசன்னாவும் வேறு பல பெண்களும் அவரோடிருந்தார்கள். இவர்கள் தங்கள் உடமையைக் கொண்டு அவருக்குப் பணிவிடை செய்துவந்தார்கள்" (லூக்கா 8: 1-3).

புனித லூக்கா பூரணத்துவமான மனமாற்றத்தின் அடையாளமாக புனித மகதலா மரியாவை முன்வைக்கின்றார். பட்டணத்துப் பாவி எனப் பெயர் பெற்ற இவர் பலராலும் கேவலமாகக் கருதப்பட்டார். ஆனால் இயேசுவோ இரக்கத்தின் பார்வையை, அன்பின் பார்வையை, மன்னிப்பின் பார்வையை இவர் மேல் படவிடுகின்றார். மகதலா புதுவாழ்வுப் பயணத்தை ஆரம்பிப்பதற்கு இயேசு பாதையைத் திறந்துவிடுகின்றார்.

சைமன் எனும் பரிசேயன் இராவுணவிற்காக இயேசுவிற்கு அழைப்பு விடுத்திருந்தான். அழைப்பை ஏற்று இயேசு அவ்வீட்டிற்குச் சென்று உண வருந்தலானார். அப்பொழுது அப்பரிசேயன், இயேசுவின் பெருமனத்தைப் புரிந்துகொள்ளாமல் இயேசுவைப் பற்றித் தவறாகத் தன்னுள்ளத்தில் சிந்தித்துக் கொண்டிருந்தான். இயேசு அவனது உள்ளத்தைத் தெரிந்தவராய் உண்மையுறவைப் புரியவைத்தார். மனமாற்றத்தின் மறுபக்கத்தை,

புதியவாழ்வின் இனிய பக்கத்தை திறந்துவைத்தார். அந்த வீட்டில் இருந்த ஏனைய ஆட்கள்பற்றி எதுவித சிந்தனையுமில்லாமல், கிறிஸ்துவையே மையப்படுத்தியவராய், அவரது காலடிகளில் நின்றுகொண்டு, கண்ணீரால் அவற்றை நனைத்துக் கொண்டு, தனது கூந்தலால் துடைத்தவராய், அவற்றை முத்தமிட்டவண்ணம் நறுமணதைலத்தால் பூசினார். தூய அன்புப் பரிமாற்றம் ஒருபோதும் தோற்பதில்லை. மனமாற்றத்தின்பின்னர், இயேசுவின் இதயத்தில் , இடம்பிடித்தராய், இறுதிவரையும் இயேசுவோடு பயணித்தவராய், கடைசியில் சிலுவையடியில் நின்றவாய் மரியா காணப்படுகின்றார்.

இயேசு உயிர்விடுகையில் மகதலா மரியாவும் யாக்கோபு, யோசேப்பு ஆகியோரின் தாய் மரியாவும் செபதேயுவின் மக்களுடைய தாயும் இருந்தார்கள் (மத்தேயு 27: 56). உயிர்த்தெழுந்த பின்னர் இயேசு மகதலா மரியாவுக்குத் தோன்றினார். இயேசு அவரிடம், "ஏன் அழுகிறாய்? யாரைத் தேடுகிறாய்?" என்று கேட்டார். அவரைத் தோட்டக்காரர் என்று நினைத்து அவரிடம், "நீ அவரைத் தூக்கிக்கொண்டு போயிருந்தால் எங்கே வைத்தீர் எனச் சொல்லும். நான் அவரை எடுத்துச் செல்வேன்" என்றார். இயேசு அவரிடம் "மரியா" என்றார். மரியா திரும்பிப் பார்த்து, "ரபூனி" என்றார். இயேசு அவரிடம், "என்னை இப்படிப் பற்றிக் கொள்ளாதே. நான் என் தந்தையிடம் இன்னும் செல்லவில்லை. நீ என் சகோதரர்களிடம் சென்று அவர்களிடம் , "என்" தந்தையும் உங்கள் தந்தையும் என் கடவுளும் உங்கள் கடவுளுமானவரிடம் செல்லவிருக்கிறேன்" எனச் சொல்" என்றார். மகதலா மரியா சீடரிடம் சென்று "நான் ஆண்டவரைக் கண்டேன்" என்றார். தம்மிடம் இயேசு கூறியவற்றை அவர்களிடம் சொன்னாள் (யோவான் 20: 15–18).

இவ்வாறு மகதலா மரியா உயிர்த்தெழுந்த இயேசுவை முதன்முதல் காணும் பாக்கியம் பெற்று, இயேசுவின் நற்செய்தியை அறிவிக்கும் முதன் அப்போஸ்தலியாக, "அப்போஸ்தலர்களின் அப்போஸ்தலி" எனப் பெயர்பெற்றவராக விளங்குகின்றார். பட்டணத்துப் பாவி என்றோ அல்லது விலைமாது என்றோ மகதலா மரியாவை அழைப்பதை நவீன ஆய்வாளர்கள் தவிர்க்கின்றார்கள். மகதலா மரியாவை ஆரம்ப காலத் திருச்சபையின் முக்கிய தலைவியாக அவர்கள் ஏற்றுக்கொள்கின்றர்கள்.

இயேசுவின் இறப்பின் 14 வருடங்களின் பின்னர் மகதலா மரியா, இலாசார், மார்த்தா, மரியன்னையின் தாயார் ஆனாள் ஆகியோர் யூதர்களால் படகின்மூலம் நாடுகடத்தப்பட்டார்கள். அவர்களது படகு பிரான்ஸ் நாட்டின் தென்பகுதிக்கரையை அடைந்தது. அங்கு மகதலா மரியா குகை ஒன்றில் வாழ்ந்தார். நாள்தோறும் சம்மனசுகள் கொடுத்த நற்கருணையே அவரது நாளாந்த உணவாயிற்று. இறுதி அருட்சாதனத்தைப் பெற்றுக்கொண்ட பின்னர் 72 வயதில் மகதலா மரியா இறையடிசேர்ந்தார்.

**ஆடி 25 புனித யாக்கோபு ( கி.மு.12 – கி.பி.44)**

இவர் செபதேயுவினதும் சலொமையினதும் மகனாக கி.மு. 12ல் பிறந்தார். இவரது சகோதரர் யோவான் ஆவார். இவர் பன்னிரெண்டு அப்போஸ்தலர்களில் ஒருவராகத் திகழ்கின்றார். செபதேயுவின் மகன் யாக்கோபு, யாக்கோப்பின் சகோதரரான யோவான் இவ்விருவருக்கும் “இடியைப் போன்றோர்“ எனப் பொருள்படும் “பொவனேர்கேசு“ என்று பெயரிட்டார் (மாற்கு 3: 17). “அன்று அதிகாலை சென்றபொழுது செபதேயு வின் மகன் யாக்கோப்பையும் அவரது சகோதரரான யோவானையும் இயேசு கண்டார். அவர்கள் படகில் வலைகளைப் பழுதுபார்த்துக் கொண்டிருந் தார்கள். உடனே இயேசு அவர்களை அழைத்தார். அவர்களும் தம் தந்தை செபதேயுவை கூலியாட்களுடன் படகில் விட்டுவிட்டு அவர் பின் சென்றார்கள் (மாற்கு 1: 19–20). மீன் பிடிப்போர் மனிதரைப் பிடிப்போராய் இயேசுவினால் மாற்றப்பட்டார்கள். இயேசுவின் மூன்று முதன்மை அப்போஸ்தலர்களில் ஒருவராக இவர் விளங்குகின்றார். ஆறு நாட்களுக் குப் பின்பு இயேசு பேதுருவையும் யாகக்கோபையும் யோவானையும் அழைத்து, ஓர் உயர்ந்த மலைக்கு அவர்களை மட்டும் தனிமையாகக் கூட்டிச் சென்றார். அங்கே அவர்கள்முன் தோற்றம் மாறினார் (மார்க் 9:2).

ஏரோது அரசன் கி.பி. 44ம் ஆண்டில் யாக்கோபை வாளால் வெட்டி, அப்போஸ்தலர்களுள் முதன்முதலாக மறைசாட்சியாக மரணிக்கும் வாய்ப்பினை வழங்கினான்.

**ஆடி 29 புனித மரியா**

பெத்தானியாவைச் சேர்ந்த மார்த்தா, லாசார் ஆகியோரின்

சகோதரியாவார். அப்போது இயேசு ஓர் ஊரை அடைந்தார். அங்கே ஒரு பெண் அவரைத் தம் வீட்டில் வரவேற்றார். அவர் பெயர் மார்த்தா. அவளுக்கு மரியா என்னும் சகோதரி இருந்தார். மரியா அவரது காலடியில் அமர்ந்து, அவர் சொன்னதைக் கேட்டுக்கொண்டிருந்தார். ஆனால், மார்த்தா பற்பல பணிகள் புரிவதில் பரபரப்பாகி இயேசுவிடம் வந்து,

"ஆண்டவரே, நான் பணிவிடைசெய்ய என் சகோதரி என்னைத் தனியே விட்டுவிட்டாளே. உமக்குக் கவலையில்லையா? எனக்கு உதவிபுரியும்படி அவருக்குச் சொல்லும்" என்றார். ஆண்டவர் அவரைப் பார்த்து, "மார்த்தா, மார்த்தா! நீ பவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகின்றாய். ஆனால், நேர்மையானது ஒன்றே. மரியாளோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்பட மாட்டாது" என்றார் (லூக்கா 19: 38-42). இவ்வாறு இயேசு மரியாவின் வாழ்வில் ஏற்பட்ட மனோபாங்கு மாற்றத்தை வரவேற்கின்றார். இயேசுவோடு உடனிருந்து உறவுகொள்வதே சீடத்துவ அழகாகும்.

இயேசு இலாசரை உயிர்ப்பிக்கச் சென்றபொழுது இலாசார், மாத்தா, மரியா ஆகியோர்மீது அவர் அன்புகொண்டிருந்தார் என்பது தெளிவாகின்றது. "மார்த்தாவிடமும் அவருடைய சகோதரியான மரியாவிடமும் இலாசரிடமும் இயேசு அன்புகொண்டிருந்தார்" (யோவான் 11: 5).

**ஆடி 26 புனித அன்னம்மாள்**

அன்னாள் என்ற கிரேக்க சொல்லிற்கான அர்த்தம் அருள்வளமுடையவர் என்பதாகும். புனித கன்னி மரியாளின் பெற்றோரான புனித சுவக்கீனும் புனித அன்னம்மாளும் திருச்சபையில் நற்பண்பிற்குப் பேறுபெற்ற புனிதர்களாக சிறந்து விளங்குகின்றார்கள் என்று புனித யோண் டமஸன் எடுத்தியம்புகின்றார். ஜஸ்ரினியன் பேரரசன் 550ம் ஆண்டு புனித அன்னம்மாள் பெயரில் ஓர் ஆலயத்தைக் கட்டினார். 2ம் ஜஸ்ரினியன் பேரரசன் 705ம் ஆண்டு புனித அன்னம்மாள் பெயரில் இன்னுமொரு ஆலயத்தைக் கடடினார் என்று கோர்டினுஸ் கூறுகின்றார். இவரது பூதவுடல் 710ம்ஆண்டு பலஸ்தீனாவிலிருந்து கொன்ரன்ரீநோபிளிற்குக் கொண்டு வரப்பட்டது. இவர் பெயரில் பல புதுமைகள் இடம்பெற்றதாக எவ். குப்பர்

கூறுகின்றார்.

நல்ல திருமண வாழ்விற்கும் பிள்ளைகளின் கல்வி வளர்ப்பிற்கும் மாதிரியாய் விளங்கும் புனித அன்னம்மாள் மூலம் விண்ணப்பிக்கப்படும் மன்றாட்டுக்களை இறைவன் பேருவகையோடு ஈந்தருள்கின்றார். தொலைந்துபோன உலகை மீள்கொணரும் கருணையின் ஊடகமாகவும் இறைவனின் தாயாரைப் பெற்றெடுத்த தாயாகவும் பேறுபெற்ற நிலைக்கு அன்னம்மாள் இறைவனால் உயர்த்தப்பட்டார். புனித அன்னம்மாள் தூய்மை, இரட்சணிய வாஞ்சை போன்ற பண்புகளால் நிரப்பட்டு, பெரும் மகிழ்ச்சியோடு பூரிப்படைந்து காணப்பட்டார். அருளின் பாத்திரமாய் இருந்து கொண்டு தனது கணவனை இல்லறக் கற்புநெறியிலும் தனது மகளை நிறை பக்தியிலும் வளர்ப்பதில் வாஞ்சைகொண்டு செயற்பட்டார். இதிலிருந்து பெற்றோரின் பிரதானமான கடமை பிள்ளைகளுக்கான கல்வியூட்டத்தை சிறந்த முறையில் முன்னெடுத்துச் செயற்படுவதாகும் என்பது புலனாகின்றது. இதன்மூலம் அவர்கள் படைத்த இறைவனை மகிமைப்படுத்தவும் காலாதிகாலம் இறைமாட்சிமை நீடித்துநிலைக்கவும் தம் ஆன்மாக்களை இரட்சணியத்திற்கு இட்டுச்செல்லவும் ஏதுவாகின்றது. தமது பிள்ளைகளுக்கான பொருத்தமான கல்விவழங்கல் மூலமாகவே பெற்றோர் தம் இரட்சிப்பை உறுதிப்படுத்திக் கொள்ளமுடியும் (2 தீமொ. 2:5) என்று புனித பவுல் வலியுறுத்துகின்றார். புனித அன்னம்மாள் நற்பெற்றோருக்குரிய பண்புகளை வலுப்படுத்தி, பெற்றோருக்கான சிறப்பியல்புகளுக்கு மீள்வடிவம் கொடுத்தார்.

### ஆடி 28 புனித அல்போன்சா (1910-1946)

இந்தியாவின் முதற்புனிதையாக ஜொலிக்கும் அல்போன்சா கேரளாவில் 1910ம் ஆண்டு ஆவணி மாதம் 19ம் திகதி பிறந்தார். பிறந்த 8ம் நாள் "அன்னா" என்ற பெயரில் திருமுழுக்குப் பெற்றார். செல்லமாக "அன்னக்குட்டி" என அழைக்கப்பட்டார். இவர் பிறந்த 3ம் மாதத்தில் இவரது அன்னையார் இறையடி சேர்ந்தார். மூத்த இரு பிள்ளைகளையும் தன்னோடு வைத்துக்கொண்டு தந்தையார் கடைக்குட்டியான அன்னக்குட்டியைப் பெரியஅம்மாவின் பொறுப்பில் வளரவிட்டார். சிறுவயதிலேயே பிறர்சிநேக அன்புச் செயல்களில் ஆர்வத்தோடு ஈடுபடுவதோடு, வீட்டிலும் ஆயத்திலும் பக்தியோடு செபிக்கலானாள். துனக்குக்கிடைக்கும் தீன்பண்டங்களை

ஏழைகளுக்குப் பகிர்ந்துகொடுத்து இன்பம்கண்டாள். பிரான்ஸ் நாட்டில் குழந்தை திரேசா எவ்வாறு தன்னைக் கடவுளுக்கு முழுமையாக அர்ப்பணித்துப் பேருவகை கொண்டு வாழ்ந்தாரோ அதேபோன்று கேரளாவின் அன்னக்குட்டி கடவுளின் செல்லக்குட்டியாக்த் தன்னை உருவாக்கிக் கொண்டாள்.

இளம்வயதானதும் பெரியம்மா இவருக்குத் திருமணம் செய்துகொடுக்க ஏற்பாடுசெய்வதை அறிந்த அல்போன்சா வீட்டின் பின்புறம் எரிந்துகொண்டிருந்த நெற்பதரில் காலைக் காயப்படுத்த எத்தனித்தாள். அப்பொழுது அவள் தவறுதலாக நெருப்பில் விழுந்து, ஆடை எரியலாக, உயிராபத்திற்கு உள்ளாக்கப்பட்டாள். விளைவாக, கடுமையான மூன்றுமாத சிகிச்சையை எதிர்கொண்டாள். சகலவிதமான நோவுகளையும் புன்முறுவலோடு ஏற்றுக்கொண்டாள். துறவியாக வேண்டும் என்ற எண்ணமே இவளது இதயத்தில் சுடர்விட்டுப் பிரகாசித்தது.

அல்போன்சா தனது 17ம் வயதில், 1927ம் ஆண்டு, கிளாறா கன்னியர் இல்லத்தில் இணைந்துகொண்டாள். 1634ம் ஆண்டு அல்போன்சா துறவறத்தில் முதல்வாக்குதியை மேற்கொண்டார். பற்பல துன்பங்களை, வருத்தங்களை அனுபவித்த அல்போன்சா 1936ம் ஆண்டு, "இயேசுவே! இனிமேல் நான் உமக்கே முற்றிலும் சொந்தம், என்னை என்ன வேண்டுமானாலும் செய்துகொள்ளும்" என்று வேண்டுதல்செய்து துறவியாகத் தன்னை நித்தியத்திற்கம் அர்ப்பணமாக்கினார். நித்திய வாக்குறுதியின் பின்னர் அல்போன்சா வாழ்ந்தது பத்து ஆண்டுகளே. இக்காலப்பகுதி அல்போன்சாவிற்கு சிலுவைப்பயணமாகவே அமைந்தது.

அமைதியாகவே துன்பங்களைத் தாங்கிக்கொண்ட அல்போன்சாவிடம் சக சகோதரிகள் "எவ்வாறு உங்கள் வாழ்க்கையில் இலகுவான முறையில் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளமுடிகின்றது?" கேட்டார்கள். அதற்குப் பதிலாக, "எதையும் தாங்கும் இதயத்தை நான் அடைய எத்தனை நாள் செபித்தேன்" என்று செபத்தின் வல்லமையை எடுத்தியம்பினாள்.

ஒரேநாளில் சகோதரி அல்போன்சா மேற்கொண்ட இறையன்பை

வெளிக்காட்டும் புண்ணியங்களாக அவரது குறிப்பேட்டில் காணப்படுபவை பின்வருமாறு:

“திருப்பலி 1, நற்கருணை 1, ஆசை நற்கருணை 30, செபமாலை 2, அனுக்கிரக செபமாலை 4, திரு இருதய செபமாலை 1, ஆலய சந்திப்பு 17, சிலுவைப் பாதை 1, ஒறுத்தல் முயற்சிகள் 16, ஆசை அடக்கம் 130, எளிமை 15, பிறரன்புச் செயல் 150, மனவல்லியசெபம் 175.“ இவரது கீழ்ப்படிதலைச் சோதித்த ஆயர் ஜேம்ஸ் கானாச்சேரி “இவள் ஒரு புனிதை“ என்று குறிப்பிட்டுள்ளார்.

ஒருமுறை இவருக்கு ஆஸ்மா என்றும் தொற்றுநோய் என்றும் சக சகோதரிகள் தலைவியிடம் முறையிட்டு, இவரைத் தனிமைப்படுத்துமாறு கேட்டனர். காரணம் இவர் இருமும்பொழுது இரத்தமும் வெளிவந்தது. பொது வாழ்வு கெடக்கூடாது எனக்கருதிய சபைத்தலைவி சகோதரிகளின் விண்ணப்பத்தை அல்போன்சாவிடம் வெளிப்படுத்தினார். அப்பொழுது அல்போன்சா, “இன்னும் ஒன்பது நாட்களுக்குள் குறையாவிட்டால் தங்கள் விருப்பப்படியே செய்யுங்கள்” என்றார். அல்போன்சா புனித குழந்தை தெராசாவிடமும் எலியாஸ் அடிகளாரிடமும் நவநாள்செபம் செய்தார். 9ம் நாள் காலையில் காய்ச்சல்குறைந்து சாதாரணநிலையில் காணப்பட்டார். “இரவில் என்ன நிகழ்ந்தது?” என்று தலைவி விசாரித்தார். ஆதற்கு அல் போன்சா, “எலியாஸ் அடிகளாரும் புனித குழந்தை தெராசாவும் காட்சி யளித்துக் குணமளித்து, “உனக்குத் தொற்றுவியாதி ஏதும் வராது. ஆனால் வேறுநோய்கள் வந்துகொண்டேயிருக்கும்” எனக் கூறிச் சென்றதைக் குறிப்பிட்டார்.

பின்னர் ஆறு மாதங்களுக்கு பொதுவாழ்வில் ஈடுபட்டு கன்னியர் இல்லப்பணிகளை மேற்கொண்டு தன்னை வெறுப்போரிடம் வெகுவாக அன்பு காட்டினார். முற்றம்கூட்டுதல், கழிவறை சுத்தம்செய்தல் போன்ற வற்றை இன்முகத்துடன் தானே முன்வந்துசெய்தார். இவர் தன்னைச் சந்திக்க வருபவர்களுக்கு சகிப்புத்தன்மை பற்றியும் அதன் மேன்மை பற்றியும் இறைவன்மீது நமக்கிருக்கவேண்டிய நெருக்கமான அன்புறவு, விசுவாசம் பற்றியும் சொல்லிக்கொண்டேயிருப்பார். அல்போன்சா தன் வருத்தத்தின்

விளைவாக அனுபவித்த பரவசஉணர்வை பின்வருமாறு விளக்குகின்றார்: "பரவசம் அடைந்தபின் ஒருவித மயக்கநிலை அடைவேன். ஆப்போது நான் காணும் காட்சிகள் வருணிக்க இயலாதவை. அறை முழுவதும் தெய்வீக ஒளியால் பிரகாசமாகும். இயேசு என் பக்கத்தில் அமர்வார். தனது இதயத்தை தெய்வீக இன்பத்தால் நிரப்புவார். ஏனக:கு அது அளவில்லாத ஆனந்தமாக இருக்கும். அதை வார்த்தைகளால் விபரிக்கும் சக்தி எனக்கில்லை." இவரது முகத்தில் தெரிந்த புனிதத்தன்மையை, தெய்வீக ஆனந்தத்தை குழந்தைகளும் சிறுவர்களும் கண்டுணர்ந்தார்கள். சில குழந்தைகள் இவரிடம் பேசும்பொழுது, "மரியன்னையிடம் பேசுவதுபோல் இருக்கின்றது" என்றும் "தோற்றமானது வானதூதரைப்போல் இருக்கின்றது" என்றும் மெய்சிலிர்க்கக் கூறினார்கள்.

27.07.1946 நாள் மறக்கமுடியாத நாள். அல்போன்சா வழமை போல காலைத் திருப்பலியில் வராந்தாவில் இருந்தவாறே பங்குபற்றி, நற்கருணைநாதரைப் பக்தியொடு உட்கொண்டார். திருப்பலி நடைபெற்றுக் கொண்டிருக்கும்பொழுதே பரவசத்தின் அறிகுறிகள் தென்பட்டன. உடனே எழுந்து அறைக்குச் சென்று அல்போன்சா தனது கட்டிலில் படுத்துக் கொண்டார். வாந்தி எடுத்துக்கொண்டு கடின வலியை அனுபவித்தவண்ணம் பக்கத்தில் நின்றவர்களைப் பார்த்து புன்னகைத்தது, "எனக்குச் சகிப்பதற்குப் போதிய சக்தியில்லை. எனக்காகச் செபியுங்கள். இது எனக்கு கடவுள் தந்ததுதானே! நான் சகிக்கத்தான்வேண்டும்" என்று கூறியபின், "நேரம் என்ன?" எனக் கேட்டார். நேரம் செல்லச் செல்ல வேதனையின் அளவு கூடிக் கொண்டே சென்றது. தன்னால் சகிக்கமுடியாத நிலை வந்ததும், "அம்மா, மாதாவே!" என ஒருமுறை சத்தமாக அழுதுகொண்டு, அருகிலிருந்த வியாகுல அன்னையின் படத்தினை உற்றுநோக்கினார். அப்பொழது இல்லத்தலைவி, "மகளே, அமைதியாக இரு" என்று கூறி பாடுபட்ட சிலுவையை முத்தமிடக் கொடுத்தார். "அமைதி குறைவாக நான் இல்லை அம்மா, எனக்கு உடுப்பு உடுத்துங்கள்" என்றார்.

"ஏன் நீங்கள் நல்ல உடுப்புத்தானே உடுத்தியிருக்கிறீர்கள்?" எனக் கேட்க, "நான் போகவேண்டும். எனக்குரிய நல்ல ஆடையை அணிவியுங்கள்" என்று கூறினார். பின்னர் "இயேசு, மரி, சூசை" எனப் பெருமூச்சுவிட்டார்.

அருகிருந்த சகோதரியிடம், "என் இதயத்திலிருந்து ஒரு சத்தம் வருகின்றது. அது கேட்பதற்கு நன்றாக இருக்கின்றது" என்று கூறியவண்ணம் புன்னகை பூத்தவாறு அல்போன்சா இறைவனோடு நிரந்திரமாக இணைந்துகொண்டார். ஆன்மீக நிறைவுத் திருப்பலியைத் தொடர்ந்து அல்போன்சாவின் இறுதி ஊர்வலம் எளியமுறையில் இடம்பெற்றது. அல்போன்சா 1986ல் 2ம் அருள் பவுல் திருத்தந்தையால் முத்திப்பேறு பட்டம் பெற, 2008ல் 16ம் பெனடிக்ற் திருத்தந்தையால் புனிதர் பட்டம் பெற்றார்.

**ஆடி 29 புனித மார்த்தா**

இவர் மரியாவிற்கும் லாசரஸிற்கும் சகோதரி ஆவார். யெருசலேமி லிருந்து இரு மைல் தொலைவிலுள்ள பெத்தானியாவில் இவர் வசித்து வந்தார். எமது மீட்பராம் இயேசுக் கிறிஸ்து தனது பொதுப் பணியின் மூன்றாம் ஆண்டுவரை கலிலேயாவிலே வாழ்ந்துவந்தார். இறுதி ஆண்டிலேயே அவர் யூதேயாவில் தீவிரமாகப் பணியாற்றினார். அக் காலத்தல் அவர் இம் மூன்று தூய சகோதரர்களின் இல்லத்தை அடிக்கடி தரிசித்தார். மூத்த சகோதரியான மார்த்தா வீட்டுப் பொறுப்பின் பிரதானமான பகுதியினைச் சுமந்துகொண்டாள். அதேவேளை, வீட்டிற்கு விருந்தாளியாக வரும் இயேசுவிற்குப் பணிவிடைபுரிவதில் புனித மார்த்தா பேருவகை கொண்டு காணப்பட்டார். ஆயினும் மார்த்தாவைப் பார்த்து இயேசு கூறுகின்றார்:

"மார்த்தா, மார்த்தா! நீ பலவற்றைப் பற்றிக் கவலைப்பட்டுக் கலங்குகின்றாய். ஆனால், நேர்மையானது ஒன்றே. மரியாளோ நல்ல பங்கைத் தேர்ந்தெடுத்துக் கொண்டாள். அது அவளிடமிருந்து எடுக்கப்பட மாட்டாது" என்றார் (லூக்கா 19: 38-42). இவ்வாறு இயேசு மார்த்தாவுக்குத் தன்னோடு உடனிருத்தலின், உறவுகொள்வதன் அவசியத்தை உணர்த்து கின்றார். இறைப்பணியின் பன்முகப்படுத்தப்படல் இங்கு புலனாகின்றது. ஒரு தனிமனிதனின் உடல்சார் தேவைகளும் உளம்சார் தேவைகளும் ஒருங்கே நிறைவு செய்யப்படுவதற்கு மெய்யடியார்கள் இன்று தேவைப்படுகின்றார் கள். அதற்கு நாம் தயார் நிலையிலுள்ளோமா?

**– டேவிற் வி. பற்றிக், அ.ம.தி.,**
**வசந்தகம், சுவாமியார் வீதி,**

# இல்வாழ்வு நல்வாழ்வாகட்டும்!

இல்வாழ்வு என்பதை எல்லோரதும் நல்வாழ்வாக ஆக்குவதே எனது இலக்காகும் இப்புவியினில் வாழ்வோர் எவரையும் "பொல்லாதவர்" எனப் புறநீங்கல் செய்யாது, வாழ்வோரின் கூட்டத்தில் அவர்கள் இடம்பெறுவதற்கு நல்லோர் எல்லோரும் இணைந்து செயற்படுதல், நேர்நோக்கில் சமூக இயைபாக்கத்தை முன்னெடுத்தல், விழுமியக் கல்வியை வலுவானமுறையில் பரவலாக்கல் போன்றன செயல்வடிவம் பெறவேண்டும்.

ஒரு கதை. சிறை பிடிக்கப்பட்ட அழகான இளவரசியுடன் இணைந்து வாழ்ந்து வந்தாள் கிழவி ஒருத்தி. இளவரசியின் அழகினைப் பொறுக்க மாட்டாத அக்கிழவி, இளவரசியைக் காணும்போ தெல்லாம் "நீ அசிங்கம்" என்று மீண்டும் மீண்டும் கூறி மனவசியம் செய்து, இளவரசியின் ஆழ்மனத்தில் "அசிங்கம்" என்ற உணர்வைப் பதியவைத்தாள். இளவரசியைச் சிறைமீட்ட இளவரசனோ இளவரசியை அந்தத் தாழ்வுச்சிக்கலிலிருந்து விடுவிக்கப் பெரிதும் பாடுபடலானான். இளவரசியின் மனத்தில் புதைந்து ஆழப் பதிந்துவிட்ட தவறான மனப்பதிவுகளை நீக்குவதில் துரித நடவடிக்கை எடுத்தான் இளவரசன். விளைவாக காலப்போக்கில். இளவரசி தனது இயல்புநிலைக்குத் திரும்பினாள்.

உளவளர்ச்சிக்குத் தடையான மூடநம்பிக்கைகளை, தவறான கோட்பாடுகளை, மனித மாண்பை நலிவுறுத்தும் போலிச் சட்டங்களை, மனத்தை அசிங்கப்படுத்தும் அவலங்களை அடுத்தவர் அடிமனங்களில் பதித்துவிடும் கூனிகளின் தீனிபோடலை நீக்கிவிடுவோம். மேலும், எம் மனதில் மலை மலையாய் புதைந்திருக்கும் ஆற்றல்களையும் சக்திகளையும் பயன்படுத்தி, நம்மையே ஒடுக்கும் பல கோடுகளைப் போட்டு சிறைப்படுத்தும் முயற்சிகளைக் கைவிட்டுவிடுவோம். தன் தலைமயிரையே பிடித்து இழுத்து வீரிட்டு அழும் குழந்தையைப் போன்று நாம் போடும் கண்மூடித்தனமான வலைகளில் நாமே சிக்குண்டு எம் நன்மைத்தனத்தைச் சிதறடிக்காது, சிந்தனைச் சிற்பிகளாய் புது உலகம் படைப்போம்.

– வி.பி